**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : C.C.349/2023**

**Prosecution witness : அ.சா.1 Date : 22.05.2024**

| | |
|---|---|
| **Name: அறிவழகன்** | **Taluk : தோகைமலை** |
| **Father Name : மு.சீதாராமன்** | **Calling :வனச்சரக அலுவலர்** |
| **Village : தோகைமலை,கடலூர்** | **Age : 57** |

**( Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கரூர் வனக்கோட்டம் கடவூர் 1 சரகத்தில் வனச்சரகர் அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 24.07.2022 ம் தேதிகாலை சுமார் 04.30 மணியளவில் மேட்டூர் வனச்சரகம் உள்ளூர் தண்டா தெற்குப்பிரிவு கொளத்தூர் பீட் எல்லைக்குட்பட்ட மேட்டூர் வட்டம் கொளத்தூர் ஒன்றியம் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, ஆலமரத்துப்பட்டி அஞ்சல், கூல்கரடு பகுதியில் வசிக்கும் புஸ்பநாதன், த.பெ. தோமஸ்(61) என்பவரது பட்டா நிலத்தின் சர்வே எண்.870/6, மின் இணைப்பு எண்.302 , சென்னம்பட்டி வனச்சரகம் ஈரோடு வனக்கோட்டம் வடபர்கூர் காப்புக்காட்டிலிருந்து ஒற்றை காட்டுயானை உணவுக்காக காப்புக்காட்டிலிருந்து விவசாய நிலத்திற்கு உணவுதேடி வரும்போது மேற்படி எதிரியின் விவசாய நிலத்தில் குச்சி நட்டு அதன் வழியே இரும்புக்கம்பியின் மூலமாக மின்சாரம் பாயும் வகையில் அமைக்கப்பட்டு அன்று அதிகாலை யானை வந்ததை அடுத்து முன் முனை மின்சாரம் பாய்ந்து யானை சம்பவயிடத்தில் இறந்தது. கொளத்தூர் பீட் வனப்பணியாளர் பத்ரன் கொடுத்த தனியறிக்கையின் பேரில் சம்பவயிடத்திற்கு குழுவினருடன் சென்றோம். ( **தனியறிக்கை**

**அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பு உயர் அதிகாரிகளுக்கு மாவட்ட வன அலுவலர் சேலம் மற்றும் சேலம் மண்டல வனப்பாதுகாவலர், வருவாய் துறை, காவல் துறை மற்றும் மின்சாரதுறை, கால்நடை மருத்துவர், NGO அவர்களுக்கு தகவல் கொடுத்து, சம்பவயிடத்திற்கு வரவைத்தேன். எதிரியை சம்பவயிடத்தில் விசாரித்து எதிரி புஷ்பநாதன் என்பவரிடம் சம்பவயிடத்திலேயே ஒப்புதல் வாக்குமூலம் எவ்வித துன்புறுத்தலும் இன்றி பெறப்பட்டது. ராமன்பட்டி பீட் வனக்காப்பாளர் ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் பதிவுசெய்தார். அதில் நானும், என்னுடன் வந்த குழுவினரும் சாட்சி கையெழுத்து செய்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **( கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) கொளத்தூர் பீட் வனக்காப்பாளர் ஆ.பத்ரன் என்பவர் சம்பவயிடத்திலேயே H நமுனா தயார் செய்தார். H நமுனா எண்.0109451. இதில் ஈர நிலையிலுள்ள இரண்டு தந்தங்கள்.

**1.** வலது தந்தம் 90 செ.மீ நீளம், சுற்றளவு 22 செ.மீ,

**2.** இடது தந்தம் 89 செ.மீ நீளம், 22. 4 செ.மீ சுற்றளவு கொண்ட இரண்டு தந்தங்கள்.

**3.** மரக்குச்சிகள்

1. பொரசு நீளம் 235 செ.மீ, சுற்றளவு 16 செ.மீ
2. துருஞ்சி நீளம் 261 செ.மீ, சுற்றளவு 14 செ.மீ

3. கட்டுக்கம்பி 1020 கிலோ கிராம் இதனை H நமுனா மூலம் கைப்பற்றப்பட்டது. இந்த வழக்கில் உள்ளூர் தண்டா தெற்கு பிரிவு வனவர் ரகுநாதன் அவர்கள் ஸ்தல மகஜர்சம்பவயிடத்திலேயே தயார்

செய்தார். நாங்கள் சாட்சி கையெழுத்து செய்தோம். அதிலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். ( **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4) யானையின் இறப்பு குறித்து பிரேத பரிசோதனை செய்யவேண்டி வனக்கால்நடை மருத்துவர் ஒசூர் மொபைல் யுனிட்டிற்கு ஒரு வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். சம்பவ நடந்த இடத்தை என் முன்னிலையில் ராமன்பட்டி பீட் வனக்காப்பாளர் குழந்தைவேல் என்பவர் தோராய வரைபடம் ஒன்றை வரைந்தார். சம்பவயிடத்திற்கு ஏற்கனவே தகவல் சொல்லி வரவழைத்த கால்நடை மருத்துவர் பிரகாஷ் என்பவர் சம்பவயிடத்தில் இறந்துபோன யானையை பிரேத பரிசோதனை செய்தார்.

5) கொளத்தூர் உதவி பொறியாளர் அவர்களுக்கு யானை மின்சாரம் பாய்ந்து இறந்தது சம்மந்தமா விரிவான அறிக்கை ஒன்றை கொடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் ஒன்றை 24.07.2022 ம் தேதி கொடுத்தேன். யானையை சம்பவயிடத்திலேயே பிரேத பரிசோதனை செய்து புகைப்படம் மற்றும் குறுந்தகடு மூலம் பதிவுசெய்தோம். எதிரியை 24.07.2022 ம் தேதி வழக்கு சம்மந்தமாக கைதுக்கான காரணத்தைக்கூறி கைதுசெய்து, எதிரியை மேட்டூர் வனச்சரகர் அலுவலகத்திற்கு அழைத்துவந்து குற்ற வழக்கு எண். 5/2022 பிடிப்பொருள்கள் மீது குற்ற வழக்கு எண். சிவப்பு பெயிண்டினால் எழுதப்பட்டது. கடவுச்சீட்டு மூலமாக வனவர் ரகுநாதன், வனக்காப்பாளர் பத்ரன், வனக்காப்பாளர் குழந்தைவேல் மூலமாக எதிரியை கனம் நீதிமன்றத்திற்கு அழைத்துவந்து அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு பணிமாறுதல் காரணமாக நான் சென்றுவிட்டதால் மேல் விசாரணைக்காக வனச்சரகர் அலுவலகத்தில் வழக்குகோப்பினை ஒப்படைத்தேன்.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**